RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/rjt22466

OPEN ACCESS

# எட்டுத்தொகை நூல்களில் அறக்கருத்துக்கள்

இ. மார்ஜிலின்ஜின்ஸி [அ, *], ஜா.ஞா. ஜோணிஜெபமலர் [அ]

[அ] தமிழாய்வுமையம், முஸ்லீம்கலைக்கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), திருவிதாங்கோடு, கன்னியாகுமரி-629174, தமிழ்நாடு, இந்தியா

# Ethical Concepts in Eight Anthologies

**E. Margilin Jincy [a,*], J.G. Joney Jeba Malar [a]**

[a] Research Centre of Tamil, Muslim Arts College, (Affiliated to Manonmaniam Sundaranar University) Thiruvithancode, Kanniyakumari-629174

* Corresponding Author: margilinjincy@gmail.com

Received: 01-07-2022
Revised: 05-09-2022
Accepted: 20-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Virtue is beneficial to human life. It can give rise in life. The purpose of this article is to find out about it through Ettuthogai Books. It is an ancient Tamil tradition to preach virtues common to all. Moral concepts are abundant in the literature of Palanthamil. Sangha literature says that man should live in an honest way. Literature with human life. Life is also closely related with historical situation. Virtue means a bundle of good deeds meaning virtue is what gives rise to human life and promotes well-being in life. Kings of the Sangam era were high-spirited leaders who removed poverty by giving things to the poets and poets who came to him with a good heart. Their high quality is to see their goods exchanged for others and their happiness when they receive them. We can note that various views of virtue are revealed in the Ettuthogai Books, depending on the family structure, moral thoughts about sharing, moral thoughts about gift, and mainly based on moral thoughts.

**Keywords:** Ettuthogai, Ettuthogai Arakkaruthukkal

## முன்னுரை

அனைவருக்கும் பொதுவான அறங்களை உரைப்பதே பண்டைய தமிழ் மரபாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் அறக்கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. மனிதன் நேர்மையான வழியில் வாழ வேண்டுமென சங்க இலக்கியங்கள் சொல்லி செல்கின்றன. இலக்கியம் மனித வாழ்க்கையோடும், வாழ்க்கை வரலாற்றுச் சூழ்நிலையோடும் நெருங்கிய தொடர்பு உடையனவாகும். அறம் என்பதற்கு நல்ல செயல்களின் தொகுதி என்பது பொருள். அறம் தான் மனித வாழ்வியலுக்கு உயர்வைக் கொடுத்து உதவுவதோடு வாழ்வில் நலத்தை நிலைநாட்டுகிறது. எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்ற அற கருத்துக்களை இந்த கட்டுரையில் பார்க்கலாம்.

## குடும்ப அமைப்பும் அறக்கருத்துக்களும்

மனித சமுதாயத்தின் உயிர்நாடியான குடும்பம் என்னும் அமைப்பு மிகப் பண்பட்டதாகும். மனிதன் நாடோடி நிலையிலிருந்து நாகரீக வளர்ச்சிக்கு மாற்றம் பெற்றதன் வளர்ச்சியே குடும்பமுறை அமைப்பாகும் (Manavalakan, 2013). கணவனும் மனைவியும் அறவழி நின்று நல்லறமாக நடத்தும் இல்லறத்தில் இருவருக்குமே இணையான பங்கு இருக்கிறது. ஒரு பிறவியில் கிடைத்த நல்ல கணவன்

மறுபிறவியிலும் தனக்குக் கணவனாக கிடைக்க வேண்டும் என நினைக்கும் தலைவியைக் குறுந்தொகையில் காணமுடிகிறது. இதனை,

"இம்மைமாறி மறுமையிலும் நீயாகியீரென் கணவனை

யானாகியர் நின் நெஞ்சுநேர் பவனே"

எனத் தலைவி கூறுவதாக பாடல் அமைந்துள்ளது (Nagarajan, 2004). தலைவன் பொருள் தேடிப் பிரியும் காலத்தில் தான், தலைவன், தலைவி இருவரின் மனதிலும் அன்பு கலந்த காதல் உணர்வுகள் அதிகமாகின்றன. இதனால் எத்தனை பொருள் இருந்தாலும் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து வாழும் வாழ்வே இனியது என்பதை,

"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு

மருலின் இனியவு முளவோ

செல்லாம் தோழி ஒல்வாங்கு நயத்தே"

எனக் குறுந்தொகை காட்டுகிறது (Nagarajan, 2004). மனைவியோடு சேர்ந்து வாழும் நாட்கள் தான் உண்மையாக வாழ்ந்த நாட்களாக கணக்கில் கொள்ளப்படும். தனியாக வாழ்ந்த நாட்கள் வாழா நாட்களாகும் என்பதை ஐயூர் முடலன் தன் பாடலில் விளக்கியுள்ளார்.

## ஈகை பற்றிய அறச்சிந்தனைகள்

தமது பொருளை பிறருக்கு பகிர்ந்து கொடுத்தல், வறுமையால் வாடி வந்தவர்களுக்குத் தனது பொருள்களை ஈதல் என வாழ்வியல் அறங்கள் பல இருக்கின்றன. அரசனிடம் சென்று பொருள் பெற்று வந்த சங்கப்புலவர் ஒருவர் அறம் செய்ய யாரிடமும் கேட்க வேண்டியதில்லை. தம் இல்லம் நாடி வந்த வறியவர்களுக்கு பழங்கள் பழுத்த நாடிப் பறவைகள் செல்வது போலும் வறியவர்களுக்கு ஈயும் செல்வம் பெற்றதன் பயனே ஈதல் ஆகும். குணமில்லாதவன் பொருள் இருந்தும் இல்லாதவனாகிறான் என்பதைத் திருவள்ளுவர்,

"ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்கிறார் (Puliyur Kesigan, 2009). வறியவர்களுக்கு ஈதலும் அதனால் உண்டாகும் புகழால் வாழ்வதும் மனித வாழ்விற்கு இன்றியமையாதது எனக் குறள் மொழிகிறது. திருக்குறளுக்கு முன்னரே நற்றிணை பாடலில், புகழோடு வாழ்பவரின் செல்வம் அனைவருக்கும் பயன்பட்டு நிற்குமாற்றை,

"இசைபட வாழ்பவர் செல்வம் போல"

என்று குறிப்பிடுகிறது (Narayanasamy Iyer, 2007). பிறருக்கு துன்பத்தை நீக்கி வேண்டியதை கொடுத்து வாழ்வதே இனிய வாழ்வாகும்.

"பொருநன் றாற்றின் பேணுருமுளரே"

என்னும் குறுந்தொகைப் பாடலடியானது பெரியளவில் உதவி செய்தால் செய்தவரை யாவரும் விரும்புவர் என குறிப்பிடுகிறது (Nagarajan, 2004). இவை போன்று ஈதலில் செல்வம் பெறுதல் ஈவதற்காகத்தான். ஆகையினால் ஈகையை போற்ற வேண்டும் என குறிப்பிடுகிறது.

## பொருள் பற்றிய அறச்சிந்தனைகள்

மக்களின் வாழ்க்கைக்கு பொருள் இன்றியமையாத ஒன்றாகும். பொருளை ஈட்ட முயற்சி மிக மிக அவசியம். தலைவன் பொருள் தேடச் செல்லும் இடத்து அவனது போக்கைத் தடுக்கும் முகமாகத் தலைவி சொல்லும் சொற்கள் பலவும் பொருளின் இயல்பை குறைத்துக் கூறித் தலைவரின் பிரிவை

உயர்த்தி கூறும் போதெல்லாம் பானையில் கசியும் நீராய் பொருளின் சிறப்பு வெளிப்படுகிறது. நல்வழியில் ஈட்டப்படக்கூடிய பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரக்கூடியதாகும். தீய வழியில் ஈட்டப்படும் பொருள் இப்பிறவிக்கு மட்டும் அல்லாமல் மறுபிறவிக்கும் நீங்காத துயரத்தைத் தரக்கூடியதாகும்.

"செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் செய்வார்க்கு அப்பொருள்

இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ?" (கலித்தொகை பாடல் எண் 13)

எனக் கலித்தொகை கூறுகிறது. பிறருடைய துன்பத்தைப் போக்கும் அருள் உள்ளம் கொண்டவர் ஆயினும் அவரிடம் பொருள் இல்லாமல் போனால் அவ்வருள் உணர்வால் எந்தப் பயனும் விளைவது கிடையாது. எனவே துன்பம் நீக்கும் முயற்சிக்கும் அருள் மனத்தை செயல்பட வைக்கும் முயற்ச்சிக்கும் பொருள் தேடுதல் முதன்மையாகிறது. அதுபோல,

"இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்

அருள் நன்கு உடையர் ஆயினும், ஈதல்

பொருள் இல் லோர்க்கு அஃது இயை யாது ஆடுதல்

யாதும் அறிவென்" (Jeyabal, 2011)

என்று இந்த அகநானூறு பாடலில் இல்லோர் எனக் கூறுவது பொருள் இல்லாதவர் அன்று. தானாக முயன்று சேர்க்காத செல்வத்தைக் கொண்டு வாழ்வதையே இல்லோர் என்று கூறுவர் என பாடல் தெளிவுப்படுத்துவதை நாம் உணரலாம். பொருளே வாழ்க்கையை உறுதி செய்கிறது. எனவே, அறவாழ்வில் பொருளைப் பெறுதலும், ஈகை செய்தலும், இன்பமாக வாழ்தலும் தலையாய கடமைகள் என சங்கப்பாக்கள் குறிப்பிடுகின்றன.

## கொடை பற்றிய அறச்சிந்தனைகள்

தன்னை நாடிவந்த இரவலர்களுக்கும் புலவர்களுக்கும் நல்ல மனத்தோடு பொருள்களைக் கொடுத்து வறுமையை நீக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தலைவர்கள் சங்ககால மன்னர்கள். தங்களின் பொருட்கள் அடுத்தவர்க்கும் பயன்படுமாற்றையும், பொருள்கள் பெறும் போது அவர்களின் மகிழ்வையும் கண்டு மன நிறைவு கொள்வது அவர்களின் உயர்ந்த குணமாகும். சங்க மன்னர்களின் வண்மையைச் சங்கப்பாக்கள் பல எடுத்துக் கூறுகின்றன. தன் செல்வம் தனக்கன்றி பிறருக்கும் பயன்பட வேண்டும் என்ற உயரிய மனத்தைச் சங்க இலக்கியங்களிலே தான் காண முடிகிறது. மன்னர்கள் தனக்கென்று வாழாமல் பிறர்க்கென வாழும் உள்ளம் கொண்டவர்கள்.

"இனியவை பெரினே தனிதனி நுகர்கேம்

'தருக' என விடையாத் தாஇல் நெஞ்சத்து

பகுத்தூண் தொடுத்த ஆண்மை

பிறர்க்கு என வாழ்த்தி நீ ஆகன்மாறே"

இந்தப் பாடலில் இனியவை பெற்ற போதும் தான் மட்டும் தனித்து உண்ண விரும்பாமல் பிறருக்கும் பகுத்து கொடுத்து உண்ணும் தன்மை பெற்ற மன்னன் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவன் என்பதை எடுத்துக் கூறுகிறது. இரவர்களோ, புலவர்களோ யாராயிருந்தாலும் நாடி வந்தவரை வரவேற்று உபசரிக்கும் அரசனானவன் வந்தவரின் முகக் குறிப்பை உணர்ந்து கொடுக்கும் வள்ளண்மையைப் பெற்றிருந்தான் என்பதை,

"இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்

நல்லது வெஃகி விளை செய்வார்"

என்னும் அடிகள் சுட்டுகின்றன (Makkikanar, 1999). தன்னை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்ற சொல்லே மறந்து போகும்படி கொடுத்து மகிழ்ந்தவர்கள் மன்னர்கள். இரவலாக வந்து கையேந்தி நின்றபோது கைநிறையப் பொருள் கொடுத்துத் தொடர்ந்து வரும் இரவலர்களுக்கும் புதிய புதிய பொருட்களையும் கொடுத்து மகிழ்ந்தனர்.

"இரப்போர் ஏந்துகை நிறையப் புரம்போர்

புலீம்இல் உள்ளமொரு புதுவதந்து உவக்கும்

பெருழ்பொருள்" (Jeyabal, 2011)

பொருளைப் படைத்தவர்கள் அதனைப் பிறர்க்குக் கொடுத்தாலும் இருப்போரை நாடிச்செல்வது இயற்கை அவ்வாறாக வருவோர்க்கு புதிய பொருட்களை கொடுத்து மன்னர்கள் மகிழ்விக்கின்றனர்.

## சமுதாய அறம்

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டது சமுதாயம் என்னும் அமைப்பாகும். இவ்வமைப்பானது பல்வேறு வண்ணங்களாலான மலர்கள் ஒன்றிணைந்து மாலையாவது போன்றதாகும். சமுதாய அறம் என்பது சமூகம் முழுமைக்கும் பயன் விளைவிக்கும் நெறிகளைக் குறிப்பனவாகும். மனிதன் தான் படைக்கும் இலக்கியத்தை எந்த சார்பும் இல்லாமல் படைத்துவிட முடியாது.

"தான் வாழும் சமூகம், வாழ்க்கை நிலை முதலியவற்றை ஏதேனும் ஒரு வகையில் படைப்பாளன் பதிவு செய்து விடுகிறான். மிகப்பெரிய சமுதாய அமைப்பில் தனிமனிதன் ஓர் அங்கம் தான். அவனால் சமூகத்தை விட்டு பிரிந்து நின்று செயலாற்ற முடியாது. அதனால் தான் மனிதகுல சமுதாயத்தின் ஓர் அங்கமாய் அதனோடு இணைந்தும் முரண்பட்டும் மோதியும் இசைந்தும் குறிப்பிட்ட சூழலில் வாழ்கிறவன் மனிதன். மனிதகுலத்தில் தானும் ஒருவனாய் வாழும் அவன் வாழ்க்கை நடைமுறைகளின் காரணமாக அமையும் உணர்வு நிலையில் ஒரு வெளிப்பாடான இலக்கியத்தை தோற்றுவிக்கிறான்." (தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை, பக்கம் 50)

## திருமண அறம்

திருமணம் என்பது பண்பட்ட சமூக அமைப்பின் வெளிப்பாடாகும். பண்டைக்காலத்தில் தலைவனும், தலைவியும் தாங்களை எதிர்கொண்டு ஒருவரை ஒருவர் காதலித்து மணந்தமையைக் காந்தருவ மணம் எனப் பண்டைய இலக்கியங்கள் சிறப்பிக்கின்றன. திருமணம் பண்பட்ட அமைப்பாக இருப்பினும் அது சான்றோர்களால் ஏற்படுததப்பட்ட முறையினை,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொள்குறி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குறி மரபினோர் கொடுப்பச் சொல் லதுவே"

என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது (Ganesaiyar, 2010). பெற்றோர் கொடுக்க பெண்ணைக் கொள்வதே முறையான திருமண அமைப்பு என இந்த நூற்பா விளக்குகிறது. சங்க காலத்தில் காதல் திருமணத்தைப் பெற்றோர் நடத்திக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகின்ற போது தோழியர்கள் தலைவியின் பொருட்டு அறத்தோடு நின்று தலைவியின் காதலை வெளிப்படுத்தும் பாங்கு கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறான முறையில் யாருக்கும் பாதிப்பு நிகழாவண்ணம் அறவழிப்பட்டு தோழியவள் எடுத்துக் கூறுகிறாள். தலைவியை மணம் முடிக்க நினைக்கையில் தலைவி, அவளின் பெற்றோரால் இற்செறிப்பு செய்யப்படும் சூழலில் அவளைக் காணாத தலைவன் மடலேறிப் பெற முயல்வான். மடலேறி தன் காதலி இன்னாள் என்று ஊரறியச் செய்வதால் தனக்கும் அவளுக்கும் உள்ள உறவு ஊருக்குத் தெரிந்து விடும் என்ற நோக்கில் மடலேற முற்படுவான். இச்செறிப்பு,

மடலேறுதல் அக்காலச் சமுதாயத்தில் காதல் திருமணத்திற்கு எதிர்ப்பலையாகவே நிகழ்ந்தன. மணமகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பல படிநிலைகளில் பொருத்தம் பார்த்தல், திருமணச் சடங்குகள் என்று திருமணம் அமைக்கப்பட்டது. இதனை,

"இருப்பு இடம் படுத்த வடுவுடை முகத்தர்

கருங் கட் கோசர் நியமம் ஆயினும்

'உறும்' எனக் கொள்குநர் அல்லர்" (அகம் 90)

என்னும் அகப்பாடல் எடுத்துக்கூறுகிறது. ஆணும் பெண்ணுமாகக் கூடி நடத்தும் இல்லற வாழ்வு அறமெனவே போற்றப்பட்டது. மனிதன் மேற்கொள்ளும் பல்வேறு அறங்களுக்கும் இல்லறமே சிறந்ததாதலின் திருமண முறையானது அறத்தை மேற்கொள்வதற்கு அடிக்கல்லாகத் திகழ்ந்தது. சமூகத்தில் தவறுகள் ஏற்பட்டபோது ஏற்படுத்தப்பட்டதே திருமண உடன்பாடு ஆகும். அது சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்தது.

## சுற்றம் பேணல்

தன்னை சார்ந்து வாழும் நாட்டுமக்களைக் காப்பது மன்னனின் தலையாய அறமாகும். அப்படிப்பட்ட மன்னனைக் குறித்து,

"பகடுபுறந் தருநர் பாரம் ஒம்பிக்

குடிபுறம் தருகுவை யாயின் நின்

அடிபுறம் தருகுவர் அடங்கா தோரே" (புறம் 35)

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. நாட்டைக் காப்பதற்கும், படைக்கலன்கள் கொண்டு போரிடும் வீரர்களைக் காப்பதற்கும் உணவுப் பொருட்கள் தேவை. உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப்பவர்கள் உழவர்கள். ஆனால், உழவர்கள் குடியினை காக்க வேண்டும் என்னும் கருத்தை வெள்ளக்குடி நாகனார் வலியுறுத்துகிறார். நாட்டில் நடைபெறும் முதன்மைத் தொழில்களான வாணிகம், உழவு, நெய்தல் முதலிய தொழில்களைச் செய்வோர் நாட்டிற்கு முக்கியத் தேவைமிக்கவர்களாகக் கருதப்பட்டனர்.

"புலிபுறங் காக்கும் குருளை போல

மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப"

என்னும் அடிகளில் புலி தனது குட்டிகளைக் காப்பது போன்று நீ நாட்டு மக்களைக் காத்து வருகிறாய் என்று கிள்ளிவளனை இடைக்காடனார் பாராட்டுகின்றார்.

"மூத்தோர் மூத்தோர் கூற்றும் உய்த்தெனப்

பால்தர வந்த பழவிறல் தாயம்

எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பு என

குடிபுரவு இரக்கும் கூரில் ஆண்மைச்

சிறியோன் பெறின் அவ சிறந்தன்று மன்னே

மண்டுஅமரப் பறிக்கும் மதனுரை நோன்தாள்

விழுமியோன் பெறுகுவன் ஆயின் தாழிநீர்

அறுதிய மருங்கின் சிறுகோல் வெண்கிடை

என்றூழ் வாடுவறல் போல நன்றும்

நொய்தால் அம்ம தானே - மையற்று

விசிம்பு உற ஓங்கிய வெண்குடை

முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே" (புறம் 75)

மண்ணின் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும்பொழுது முதியவர் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கைச் செய்வதை அரசே பொறுப்பேற்கும். அச்செயலானது மன்னனது மனநிலை சமநிலையில் உள்ளதைக் காட்டுகிறது. மக்களின் வரிப்பணத்தைப் பெற்று நல்வழிகளில் செலவிட்டுக் குடிகளைக் காத்தல் என்பது மன்னனுக்குப் பாரமாக இருந்தாலும் அவனது மனத்திறமையும் பேராற்றலும் இலகுவாக இருக்கும் எனச் சோழன் நலங்கிள்ளி கூறுகிறார். ஒரு நாட்டை ஆளும் மன்னனின் உள்ளம், செயல் ஆகியவை திறமையாக இருந்தால் தான் நாட்டை நல்ல முறையில் காக்க முடியும்.

## போர் அறம்

பண்டைய மன்னராட்சிக் காலத்தில் மக்கள் உயர்ந்த குணமுள்ள மன்னர்களால் நன்றாக வாழ்ந்தபோதும், போரும் பூசலுமான சூழல்களை உணர்வதற்கு இடம் இருந்தது. ஒருவரையொருவர் போரில் வெற்றி கொள்வது பெருமையாக கருதப்பட்ட காலம் அது. அதனால் வீரத்திற்கும் பெரிய அளவில் சிறப்பளிக்கப்பட்ட காலமாக இருந்தது. போர்கள் நடைபெற்ற பொழுதும் அப்போர்கள் சாதாரண மக்களுக்கு இடர்கள் ஏற்படாதவாறு காத்த காலமாகும். சமயநெறிகளைக் கடைப்பிடிப்போர்க்குப் போரிலிருந்து விலகுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அவர்களை எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொண்டனர். இரவில் போர்புரிதல் அறமாகக் கொள்ளப்படவில்லை. வீரர் அல்லாதவர்களையும், புண்பட்டோரையும், சிறியோர்களையும், இளையோர்களையும் தாக்குதல் அறமற்ற அறிவிலார் செயலாகக் கருதப்பட்டது. பண்டைக்காலத்தில் நாட்டுக்காகப் போரில் உயிர்த்துறத்தல் சிறப்பானதாகக் கருதப்பட்டது.

"சிறா அரசர்! நுடியர்! பாடுவல் மகா அஅர்

துவெள் அறுவை மாயோற் குறுகி

இரும்புள் பூசல் ஓம்புமின் யானும்

விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்

என்போற் வெருவிறுப்பு உறுக வேந்தே

கொன்னும் சாதல் வெய்யோற்குத் தன்தலை!"

"மணிமருள் மாலைசூட்டி அவர் தலை

ஒருகாழ் மாலை தான் மலைத் தன்னே" (புறம் 291)

இப்பாடலில், மன்னன் பொருட்டு (மன்னனால்) உயிர்நீத்த வீரனைச் சிறப்பித்துப் பாடப்பட்ட பாடலில் மன்னன் தன் மாலையை வீரனுக்குச் சூட்டி சிறப்புச் செய்தமை கூறப்படுகிறது. மன்னர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போர் செய்தலை மேற்கொண்டுள்ளனர். புகழ் பெறுதல் அவர்களின் தலையாயக் கடமையாக இருந்தது.

"நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்

பாசறை யல்லது நீயல் லாயே" (புறம் 31)

"அடுபுகழ் மேவலொடு கண்படை யிலனே" (அகம் 214)

ஒரு நாட்டிற்குப் புகழ் தவிர நாட்டின் எல்லையை விரிவு செய்தல், குடிக்கடன், மனஉணர்வு, செல்வ மேம்பாடு, மக்கட்கொடை மறுப்பு, வஞ்சினம் முதலியவற்றின் காரணமாகவும் போர்கள் நிகழ்ந்தன.

"வையங் காவலர், வழிமொழிந்து ஒனிஒழுகப்

போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறா அது

இடம் சிறிது என்னும் ஊக்கந் றுரப்ப" (புறம் 8)

என்னும் பாடலடிகள் இதனை உணர்த்துகின்றன. நாட்டைப் பல்வேறு மன்னர்கள் ஆண்ட காரணத்தால் வலிமை, செல்வம், புகழ் காரணமாக போர்கள் நிகழ்ந்தன.

## முடிவுரை

இவ்வாறு குடும்ப அமைப்பு சார்ந்தும், ஈகை பற்றிய அறச்சிந்தனைகள், கொடை பற்றிய அறச்சிந்தனைகள் சார்ந்தும் முக்கியமாக பொருள் பற்றிய அறச்சிந்தனைகள் சார்ந்து எட்டுத்தொகை நூல்களில் அறம் பற்றிய பல்வேறு பார்வைகள் வெளிப்படுவதை நாம் கவனத்தில் கொள்ளலாம்.

## References

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Makkikanar, A. (1999) Paripadal Moolamum Uraiyum, Varthaman Pathippagam, Chennai, India.

Manavalakan (2013) Tamil cevviyal Nulkalil Aram-Ariviyal-Camukam, Tamil Digital Library, Chennai.

Nagarajan, V. (2004) Kurunthokai, New Century Book House (P)Ltd, Chennai, India.

Narayanasamy Iyer, A. (2007) Nattinai Moolamum Uraium, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License